**நுவரெலியா மாவட்டத்தின் கமநல சேவைக் குழுக்களின் - 2022**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** நுவரெலியா மாவட்டத்தின் 20 கமநல சேவைக் குழுக்களின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** நுவரெலியா மாவட்டத்தில் 20 கமநல சேவைக் குழுக்களுக்குரிய கணக்காய்வு அறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கைகளில் 18 கமநல சேவைக் குழுக்களுக்கு முனைப்பழியுள்ள அபிப்பிராயமொன்று வெளியிடப்பட்டிருந்ததுடன், ஏனைய இரு கமநல சேவைக் குழுக்களுக்கு பாதகமான அபிப்பிராயமொன்று மற்றும் மறுப்பு அபிப்பிராயமொன்று வெளியிடப்பட்டிருந்தன.அதற்கான காரணங்களாக இருந்த பொருண்மையான குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களில் உள்ளடங்கியுள்ள கணக்கீட்டு கொள்கைகளுடன் இணங்காமை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 08 கமநல சேவைக் குழுக்களின் நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு கொள்கைகள் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திருத்தப்படுவதாக. | கணக்கீட்டு கொள்கைகள் வெளிக்காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | 2000 யூன் 06 ஆம் திகதிய 518/2000 ஆம் இலக்க கமநல சேவை அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை பிரகாரம் 20 குழுக்களில் கமநல வங்கிகளின் நிதிக்கூற்றுக்கள் கமநல சேவைக் குழுக்களின் நிதிக்கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்படவில்லை. | குறிப்பிட்ட அறிவுறுத்தல் கமநல சேவை மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் இரண்டு கமநல சேவைக் குழுக்களில் | 2023 ஆம் ஆண்டு அறிக்கைகளின் மூலம் | சகல கையிருப்பு மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 99,914 ஆன விதை நெல் கையிருப்பொன்று, ரிக்கிலகஸ்கட கமநல சேவைக் குழுவில் ரூபா 7,738,650 ஆன யூரியா உரக் கையிருப்பொன்று மற்றும் பல்லேபோவல கமநல சேவைக் குழுவில் ரூபா 200,000 ஆன விவசாய வங்கிக் கடனொன்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | திருத்தப்படுவதாக. | வங்கிக்கடன் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நுவரெலியா கமநல சேவைக் குழுவின் மொத்தம் ரூபா 558,800 ஆன கட்டிடங்கள் மற்றும் பெட்டகங்கள் மற்றும் முன்வத்த கமநல சேவைக் குழுவின் பௌதீக ரீதியாக அடையாளம் காண முடியாத ரூபா 127,712 ஆன டிராக்டர் வாகனமொன்று நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஒரு குழுவொன்றை நியமித்து நிலுவைத்தொகையை தீர்த்து வைப்பதுடன், 2023 ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கைகளின் மூலம் திருத்தப்படுவதாக. | கணக்கு நிலுவைகள் திருத்தப்பட வேண்டும். |
| (இ) | ராகல கமநல சேவைக் குழுவின் இயற்கை உணவக நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட பணம் ரூபா 199,250 குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கைகளின் மூலம் திருத்தப்படுவதாக. | கணக்கு நிலுவைகள் திருத்தப்பட வேண்டும். |
| (ஈ) | பல்லேபோவல கமநல சேவைக் குழுவின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை அறவிட வேண்டிய ரூபா 214,580 ஆன மீதியொன்று நிதி நிலைமைக் கூற்றில் இரண்டு முறை பதிவு செய்யப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் திருத்தப்படுவதாக. | சரியான தொகை கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ராகல கமநல சேவைக் குழுவின் நிலையான சொத்துக்களின் துணைப் பதிவேட்டின்படி, ஆண்டின் இறுதியில் நிகர பெறுமதி ரூபா 4,004,728 ஆக இருந்த போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 4,424,734 எனக் குறிப்பிடப்பட்டதால், ரூபா 420,007 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.3.4 தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1996-1999 காலப்பகுதியில் 03 கமநல | நிலுவைத்தொகை நீண்ட | தொங்கல் கணக்கு |

| | | |
|---|---|---|
| சேவைக் குழுக்களில் காணப்பட்டு வருகின்ற மொத்தம் ரூபா 557,061 ஆன மீதித்தொகை தீர்க்கப்படவில்லை. | காலமாக காணப்பட்டு வருகின்றமையால் தீர்வுக்கான விவரங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. | நிலுவைகள் கண்டறியப்பட்டு தீர்வு செய்யப்பட வேண்டும். |

### 1.3.5 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 19 கமநல சேவைக் குழுக்களின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தம் ரூபா 25,091,217 ஆன 155 சொத்து மீதிகள் மற்றும் ரூபா 18,738,264 ஆன 98 பொறுப்பு மீதிகள் தொடர்புடைய துணை ஆவணங்கள், மீதி உறுதிப்படுத்தல்கள், காலப் பகுப்பாய்வு, வங்கிப் புத்தகங்கள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அவற்றை கணக்காய்வின்போது திருப்திகரமாக உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | இந்த மீதிகள் முன்பிருந்து முன் கொண்டுவரப்பட்ட நிலுவையில் என்பதுடன் , இதற்கு தேவையான அறிவுறுத்தல் பெறப்பட்டு சரி செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு உரிய சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு | 20 கமநல சேவைக் குழுக்களின் வருடாந்த செயற்திறன் அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 53(4)(அ) பிரிவு | ஒவ்வொரு 03 வருடங்களுக்கு ஒரு தடவையும் காணிகளின் உரிமைப் பெயர் பதிவேடு மீள்திருத்தம் செய்யப்பட்டு கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சிக்கப்பட்டு | எதிர்காலத்தில் திருத்தப்படுவதாக. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சான்றுப்படுத்த வேண்டியிருந்த போதிலும், 02 குழுக்கள் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (இ) | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| (i) | நி.பி. 110 | 13 கமநல சேவைக் குழுக்களில் சேதங்கள் மற்றும் நட்டப் பதிவேடு பராமரிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் தயாரிக்கப்படுவதாக. | நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நி.பி. 138(4), (6) மற்றும் (8) | 02 கமநல சேவைக் குழுக்களின் செலவினங்களை உறுதிப்படுத்துவதற்கு உரிய ஆவணங்கள் மற்றும் ஆதாரங்கள் வவுச்சருடன் சமர்ப்பிக்கப்படாத போது மொத்தம் ரூபா 3,224,666 ஆன 14 வவுச்சர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இந்த வவுச்சர்களுடன் தொடர்புடைய விலைப்பட்டியல்கள் மற்றும் அட்டவணைகளை முறையாக பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொடுப்பனவு செய்யப்படுவதற்கு முன் தொடர்புடைய உறுதிப்படுத்தல்கள் பெறப்பட வேண்டும். |
| (ஈ) | நிதிப் பிரமாணம் 880 மற்றும் 2020 யூன் 25 ஆம் திகதிய இலக்கம் 08/2020 என்ற கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | 08 கமநல சேவைக் குழுக்களுக்கான அதிகாரிகளினால் பிணை வைப்புச் செய்யப்படவில்லை. | எதிர்காலத்தில் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2014 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய இலக்கம் 07/2014 என்ற கமநல | 05 கமநல சேவைக் குழுக்களில் தினசரி கையில் வைத்திருக்கக்கூடிய எல்லையை விஞ்சியதாக | எதிர்காலத்தில் எல்லையை விஞ்சாதவாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | ரூபா 11,000 முதல் ரூபா 492,437 வரையிலான தொகை கையில் வைக்கப்பட்டிருந்த 44 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஊ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | 14 கமநல சேவைக் குழுக்களில் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பராமரிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய இலக்கம் 09/2009 மற்றும் 2009 யூன் 17 ஆம் திகதிய இலக்கம் 09/2009(I) என்ற பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 12 கமநல சேவைக் குழுக்களின் அதிகாரிகள் அலுவலகத்திற்கு வருதல் மற்றும் வெளிச் செல்லலை உறுதி செய்வதற்கு கைரேகை இயந்திரங்களை பயன்படுத்தவில்லை. | திருத்தம் செய்வதற்காக அனுப்பட்டுள்ளதாக. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

(அ) நுவரெலியா மாவட்டத்தின் 18 கமநல சேவைக் குழுக்களின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவின், கூட்டுத்தொகை ரூபா 5,115,465 ஆன மிகையாக இருந்ததுடன் , அதனோடொத்த 18 குழுக்களின் முன்னைய ஆண்டின் மிகை ரூபா 6,257,619 ஆகும். அதன் பிரகாரம் 06 குழுக்களுக்கான நிதி விளைவுகளில் ரூபா 1,888,716 ஆன முன்னேற்றமொன்றும் 12 குழுக்களுக்கான நிதி விளைவுகளில் ரூபா 3,030,870 ஆன பின்னடைவொன்றும் அவதானிக்கப்பட்டது. இம்முன்னேற்றத்திற்கு மொத்த வருமானத்தில் அதிகரிப்பு, நிலைய மற்றும் நிர்வாகச் செலவுகள் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்ததுடன், நிதி விளைவுகளில் பின்னடைவிற்கு விற்பனை வருமானம் குறைவடைந்தமை, அகற்றல் செலவுகள் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் நிர்வாகச் செலவுகள் அதிகரித்தமை காரணங்களாக இருந்தன.

(ஆ) அத்துடன் 02 கமநல சேவைக் குழுக்களின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவின் கூட்டுத்தொகை ரூபா 115,124 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் , அதற்கு எதிராக 02 குழுக்களின் முன்னைய ஆண்டின் மிகை ரூபா 519,841 ஆகும். அதன் பிரகாரம் அவ்விரண்டு குழுக்களுக்கான நிதி விளைவுகளில் ரூபா 634,965 ஆன பின்னமைவொன்று அவதானிக்கப்பட்டது. இப்பின்னடைவிற்கு விற்பனை வருமானம் குறைவடைந்தமை, இருப்பு அகற்றல் செலவுகள் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 04 கமநல சேவைக் குழுக்களினால் நடைமுறைக் கணக்குகளுடன் தொடர்பான காசோலை புத்தகங்களில் 09 வெற்று காசோலை புத்தகங்களில் கையொப்பங்கள் மட்டும் இடப்பட்டு அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக முறைகேடொன்று ஏற்படுவதற்கான வாய்ப்பை தவிர்க்க முடியாதிருந்தது. | காசோலைகளில் கையொப்பமிட அதிகாரம் பெற்ற அதிகாரிகள் தனிப்பட்ட தேவைகள் காரணமாக அந்த பிரதேசத்திற்கு வெளியே இருந்தமையால் , காசோலைகளில் கையொப்பமிடப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் , வெற்று காசோலைகளில் கையொப்பமிடக் கூடாது |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலத்தண்டாஹின்ன கமநல சேவைக் குழுவில் மீளாய்வாண்டில் ரூபா 132,471 பெறுமதியான 735.9 கிலோ யூரியா உரப் பற்றாக்குறை மற்றும் கந்தபொல கமநல சேவைக் குழுவின் மீளாய்வாண்டில் செப்டெம்பர் 15 ஆம் திகதி ரூபா 11,740 ஆன பணம் மற்றும் 05 A4 பொதிகள் தொலைந்தமை தொடர்பில் நி.பி. 104 இன் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இது குறித்து உளளக கணக்காய்வு விசாரணையொன்று மாவட்ட அலுவலக அதிகாரிகள் மூலம் நடாத்தப்பட்டு வருவதாகவும் மற்றும் போலீசில் புகார் அளிக்கப்பட்டுள்ளதாகவும். | இதற்குப் பொறுப்பான தரப்பினர் அடையாளம் காணப்பட்டு நட்டங்கள் அறவிடப்பட வேண்டும் |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 11 கமநல சேவை குழுக்களால் பயன்படுத்தப்படுகின்ற காணி மற்றும் கட்டிடங்களின் உரிமை சுவீகரிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சுவீகரிக்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் உரிமை சுவீகரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மந்தாரம்நுவர நகருக்கு அருகில் உள்ள மந்தாரம்நுவர கமநல சேவை குழுவிற்கு சொந்தமான 250 சதுர அடி கட்டிடம் அனுமதியின்றி வெளி தரப்பினரால் கையகப்படுத்தப்பட்டிருந்தது. | குத்தகை உரிமை பெறப்பட்டதன் பின்னர் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதே பொருத்தமானது என குழு தீர்மானித்துள்ளது. | சொத்துக்களின் உரிமையை உறுதி செய்ய வேண்டும். |
| (இ) | நுவரெலியா கமநல சேவைக் | இந்த 02 கடைகளுக்கான | செலுத்த வேண்டிய |

| | | |
|---|---|---|
| குழுவினால் பயன்படுத்தப்படுகின்ற நுவரெலியா மத்திய வர்த்தக தொகுதியில் உள்ள இரண்டு கடை அறைகளுக்காக மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் செலுத்தப்பட வேண்டிய வீத வரி ரூபா 316,584 தீர்க்கப்படவில்லை. | வீத வரி செலுத்தப்படாததன் காரணமாக நுவரெலியா மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 316,584 ஆக இருந்தது. | தொகையை செலுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 மற்றும் 2020 இற்கு இடையில் 03 கமநல சேவைக் குழுக்களில், விவசாயிகளுக்கு விற்பனை செய்வதற்காக வாங்கப்பட்ட ரூபா 197,543 பெறுமதியான காலாவதியான விவசாய விதைகள் மற்றும் விவசாய இரசாயனங்களின் கையிருப்பொன்று முறையான முறையொன்றைப் பின்பற்றி அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அகற்றப்படுவதற்கான அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | காலாவதியான இருப்புக்களை பரிசோதனை செய்த பின்னர் அப்புறப்படுத்த வேண்டும். |
| (ஆ) | 12 கமநல சேவைக் குழுக்களினால் விற்பனை மற்றும் கொடுப்பனவு அடிப்படையில் 127 விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட கடனிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ரூபா 7,219,758 மீளப்பெறப்படவில்லை. | சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அனைத்து கடன்களும் அறவிடப்பட வேண்டும். |
| (இ) | 02 கமநல சேவைக் குழுக்களினால் 2022/23 பெரும்போகம் மற்றும் சோளப்பயிர்ச் செய்கைக்காகவும் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் ரூபா 29,933,000 பெறுமதியான 159,500 கிலோ கிராம் யூரியா உரம் பெறப்பட்டிருந்ததுடன் தேவை கண்டறியப்பட்டு கொள்வனவு செய்யப்படாத காரணத்தினால் கணக்காய்வு திகதியான 2023 ஜூலை 25 அன்று இருப்பு புத்தகங்களின்படி, ரூபா | எதிர்பார்த்த அளவு நெற் பயிர்ச்செய்கை இல்லாமையால் யூரியா உரம் எஞ்சியிருந்தது. | தேவை குறித்து கண்டறிந்து இருப்புக்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 14,873,700 பெறுமதியான 69331 கிலோ யூரியா உரம் எஞ்சியிருந்தது. | | |
| (ஈ) | 16 கமநல சேவைக் குழுக்களினால் 2018 திசெம்பர் 31 ஆம் திகதிய 07/05/12/கி.வா/தா.கோ ஆம் இலக்க கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் கடிதத்தின்படி, நீண்டகாலமாக காணப்பட்டு வருகின்ற மொத்தம் ரூபா 11,162,746 ஆன 104 சொத்து நிலுவைகள் மற்றும் மொத்தம் ரூபா 11,312,746 ஆன 103 பொறுப்பு நிலுவைகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை தீர்க்கப்படாமல் இருந்தன. | தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | முகாமைத்துவ அறிவுறுத்தலின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | முன்வத்தை கமநல சேவைக் குழுவில் கடந்த வருடம் ரூபா 135,872 செலவில் உற்பத்தி செய்யப்பட்ட 3480 கிலோகிராம் (58 மூட்டைகள்) சேதனப் பசளை இருப்பொன்று பயிர்ச்செய்கைக்காக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படாமல் விளைவற்றதாக காணப்பட்டது. | சேதனப் பசளை நிலையத்தில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டாலும், விவசாயிகளுக்கு மானிய முறைமையின் கீழ் இலவச சேதனப் பசளை வழங்கப்படுவதால், அதன் தரம் குறித்து பல்வேறு சிக்கல்கள் எழுந்ததால், நிலையத்தில் தயாரிக்கப்பட்ட சேதனப் பசளைகளையும் விவசாயிகள் கொள்வனவு செய்வதைக் குறைத்தனர். | உரிய தரத்திற்கு ஏற்ற சேதனப் பசளைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். |
| (ஊ) | 02 கமநல சேவைக் குழுக்களின் 2021 சிறு போகத்தில் விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகம் செய்வதற்காக பெறப்பட்ட 2294.95 கிலோ கிராம் MOP உர இருப்பொன்று 1159.55 கிலோ கிராம் TSP உரம் மற்றும் 01 லிட்டர் மற்றும் 500 மில்லிலிட்டர் ECO Vito சேதன திரவ உரம் 794 போத்தல்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படாமல் விளைவற்றதாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | உதவி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய காலத்தில் விவசாயிகளுக்கு முறையாக வழங்கப்பட வேண்டும் |

**3.5 வெளிப்படையான மோசடிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நுவரெலியா கமநல சேவைக் குழுவில் மற்றும் கமநல வங்கியில் பின்வரும் நிதி முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன. | | |
| (i) கமநல வங்கிக்கு சொந்தமான அண்ணளவாக ரூபா 2,213,000 ஆன தொகையொன்று சட்டவிரோதமாகப் பயன்படுத்தப் பட்டமை,போலி ஆவணங்களைத் தயாரித்தமை மற்றும் அதிகாரத்தை மீறி பணம் செலுத்தப்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுகள் காரணமாக 2021 ஜனவரி 12 முதல் விவசாய வங்கியில் இணைக்கப்பட்ட விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளரின் வேலை இடைநிறுத்தப்பட்டிருந்தது. ஆனால், இது தொடர்பாக, மீளாய்வாண்டின் இறுதி வரை நிதிப் பிரமாணம் 104 இன் படி, விசாரணை நடாத்தப்பட்டு, அறிக்கை சமர்ப்பிக்கப் படவில்லை. நிதிப் பிரமாணம் 119 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு மாறாக, மாவட்ட அலுவலகத்தின் மூலம் 2017 ஜுலை முதல் அந்த அதிகாரியின் மாத சம்பளத்திலிருந்து ரூபா 28,000 வீதம் ரூபா 286,000 அறவிடப்பட்டுள்ளதுடன், இந்தத் தொகை கமநல வங்கிக்கு வழங்கப்பட இருந்த போதிலும், மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் நடைமுறை பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மேலும், சட்டவிரோதமாக பயன்படுத்தப் பட்ட தொகை என அடையாளம் காணப்பட்ட ரூபா 2,213,000 நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் அறிவுறுத்தல் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிலையத்தில் காணப்பட்ட | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 173,484 மதிப்புள்ள உரம், விவசாய உபகரணங்கள், 20 பிளாஸ்டிக் கூடைகள் மற்றும் நிலத்தராசு ஆகியவை தொலைந்து விட்ட போதிலும் இது தொடர்பாக நி.பி. 104 இன் படி விசாரணை நடாத்தப்பட்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினர் அடையாளம் காணப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | | எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | கமநல சேவைக் குழுவின் வசம் இருந்த 03 அடிக்கட்டைப் புத்தகங்கள் 2021 ஜூன் 14 அன்று காணாமல் போயிருந்ததாக நிலைய முகாமைத்துவ உதவியாளரால் 2021 ஜூன் 17 அன்று கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் காணாமல் போன பற்றுச்சீட்டு புத்தகத்திலிருந்து பெறப்பட்ட தொகை ரூபா 1,437,903 ஆக இருந்தது. இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | இது தொடர்பாக மாவட்ட அலுவலகங்கள் விசாரணை நடாத்தி வரும் நிலையில், இந்த பற்றுச்சீட்டு புத்தகங்கள் தொலைந்து போனமை குறித்து கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | விரைவில் முறையான விசாரணையொன்று நடாத்தப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் மல்தெனிய கமநல சேவைக் குழுவில் பணியாற்றிய விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து 1999 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இருப்புப் பற்றாக்குறை மற்றும் பல்வேறு முறைகேடுகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 108,793 அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலுவை தொகையை அறவிடுவது தொடர்பாக உதவி ஆணையாளரின் ஆலோசனை பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**3.6 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 கமநல சேவைக் குழுக்களில் சேதன உரங்களை உற்பத்தி செய்வதற்காக ரூபா 165,000 செலுத்தப்பட்டு 2021 ஒக்டோபர் | சேதன உரங்கள் உற்பத்தி செய்யப்படாமையால் பயன்படுத்தப்படவில்லை. | இயந்திரங்கள் நோக்கத்திற்கான பணிகளுக்கு பயன்படுத்தப்பட |

| | | |
|---|---|---|
| 09 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ”விவசாயி நண்பன்” என்ற இயந்திரம் மற்றும் கடந்த வருடத்தில் பிரதேச செயலகத்திடம் இருந்து பெறப்பட்ட மல்டி-சோப்பர் இயந்திரமொன்று பயன்படுத்தப்படாமல் விளைவற்றதாகக் காணப்பட்டன. | | வேண்டும். |
| (ஆ) அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு மற்றும் திட்டமொன்று இல்லாமல் மற்றும் முறையான ஒப்பந்தம் இன்றி ரூபா 162,700 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு 03 ஆண்டுகள் வரை கடந்துள்ள ரூபஹா கமநல சேவைக் குழுக்காணியில் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு பாதியில் முடிக்கப்பட்டு கைவிடப்பட்டிருந்த கழிவறை விளைவற்றதாக காணப்பட்டது. | குறைபாடுகள் குறித்து மாவட்ட அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது மற்றும் இதுவரை மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை. | முறையான முறையில் நிர்மாணம மேற்கொள்ளப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்.**

**நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1981 ஒக்டோபர் 16 ஆம் திகதிய 107 ஆம் இலக்க கமநல சேவைகள் ஆணையாளரின் சுற்றறிக்கையின் 30 ஆம் பந்தியின் 3 ஆம் பிரிவின்படி மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இரண்டு கமநல சேவைக் குழுக்களால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படாததுடன், 13 குழுக்கள் குறிப்பிட்ட திகதியை கடந்து 01 முதல் 02 மாதங்களுக்கிடைப்பட்ட காலப்பகுதியொன்று தாமதமாகி சமர்ப்பித்திருந்தன. | எதிர்வரும் கணக்கு ஆண்டுகளில் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**5. கமநல வங்கிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய 04/2012 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவிற்கு இணங்காதவாறு தினசரி கையில் | எதிர்காலத்தில் எல்லை மீறாமல் இருப்பதற்கு உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைத்திருக்கக்கூடிய ரூபா 10,000 எல்லையை விஞ்சியதாக 05 கமநல சேவை குழுக்களில் 66 சந்தர்ப்பங்களில் ரூபா 13,092 முதல் ரூபா 631,303 வரையான பணம் கையில் வைத்துக் கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய 04/2012 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 3.4.2 ஆம் பந்தியின் பிரகாரம் விவசாய கைத்தொழில் கடன்களை செலுத்துவதற்கான அதிகபட்ச காலம் 06 மாதங்களாக இருந்தபோதிலும், 16 கமநல சேவை குழுக்களின் 2,532 விவசாயிகளால் பெறப்பட்ட ரூபா 42,268,356 ஆன விவசாயக் கடன்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2012 பெப்ரவரி 24 ஆம் திகதிய 04/2012 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 4.4.4 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு கமநல வங்கியில் காணப்படுகின்ற மிகை பணம் வட்டி வருமானம் ஈட்டுவதற்கு முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் 04 கமநல வங்கிகளின் சேமிப்புக் கணக்குகளில் ரூபா 1,523,506 முதல் ரூபா 4,877,422 வரையான மீதிகள் காணப்பட்ட போதிலும் , மேற்குறிப்பிட்ட நிதி நலன்களைப் பெறக்கூடிய வகையில் பயனுள்ள துறைகளில் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 05 கமநல சேவைக் குழுக்களைச் சேர்ந்த 147 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ஒரு இலட்சம் கடன் மற்றும் விவசாய உபகரணக் கடன்களின் மொத்தம் ரூபா 6,667,803 மற்றும் 07 கமநல சேவைக் குழுக்களால் கமநல நியாய சபைக்கு அனுப்பப்பட்ட 122 விவசாயிகளிடமிருந்து | கமநல நியாய சபைக்கு அனுப்பி அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து கடன்களும் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட வேண்டிய கடன் ரூபா 1,941,839 அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | நிதிப்பிரமாணம் 395 (இ) இன் பிரகாரம் 03 கமநல சேவை குழுக்களின் மீளாய்வாண்டிற்கான வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் தயாரிக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | நிதிப்பிரமாணம் 386 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக தலைவரால் கையொப்பமிடப்பட்ட இரண்டு வெற்று காசோலைகள் பல்லேபோவல கமநல வங்கியின் பொறுப்பதிகாரியின் வசம் காணப்பட்டன. | மீண்டும் அவ்வவாறு ஏற்படமாட்டாது. | வெற்று காசோலைகள் கையொப்பமிடப்பட லாகாது. |
| (எ) | புலுகஹாபிட்டிய கமநல சேவைக் குழுவின் கமநல வங்கியினால் கொம்போஸ்ட் செயற் திட்டத்திற்காக 2017 ஒக்டோபர் 20 ஆம் திகதி தனிநபர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 500,000 சார லங்கா கடன் தொகையிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ரூபா 497,281 அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட காலத்திற்குள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | விதுலிபுர கமநல சேவைக் குழுவின் நிறைவேற்றுச் செயலாளர் அல்லது உரிய பொறுப்பு வாய்ந்த அதிகாரியினால் கடன் விண்ணப்பங்களின் அங்கீகாரம் மற்றும் பரிந்துரையின்றி மீளாய்வாண்டில், 03 வகையான கடன்கள் தொடர்பாக 87 பேருக்கு ரூபா 4,241,000 ஆன கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. | கடன் விண்ணப்பங்களை அங்கீகரிப்பதற்கான மற்றும் பரிந்துரை செய்தல் தொடர்பான குறைபாடுகள் திருத்தப்பட்டுள்ளன. | கடன் வழங்குவதற்கு முன்னர் உரிய ஆவணங்கள் பூரணப்படுத்தப்பட வேண்டும். |